# பறிபோன பிரதேசங்கள்

பாகம் 45

சென்ற சில வாரங்களாக இலங்கையரசு யுத்த நிறுத்தத்தைக் கைவிட்டுத் தமிழர்களின் கொட்டத்தை அடக்கியே தீருவோம் என்று போர் முனைப்பில் ஈடுபட்டதால் என்ன நடக்குமோ எது நடக்குமோ என்ற மன உழைச்சலில் இத்தொடரில் சில பத்திகளை எழுத வேண்டியேற்பட்டது. ஆனால் சமீபத்திய கணிப்பீடுகள் பெரிதாக சிங்கள அரசாங்கம் எதையும் சாதித்துவிடப் போவதில்லை என்ற முடிவையே தருவதால் இப்பத்தியில் மட்டக்களப்புப் பிரதேசத்தின் அரசியல் பொருளாதார சமூகவாழ்க்கை பற்றிய விடயங்களை மீண்டும் கொண்டு வருகிறேன்.

மட்டக்களப்புப் பிரதேசமக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே தமது அடிப்படைத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்கள் என்பதை நான் இங்கு முன்பும் குறிப்பிட்டுள்ளேன். கடற்றொழிலில் ஈடுபடுவோர் கூட அதனைத் தமது பிரதான தொழிலாகக் கொள்ளாமல் விவசாயத்தையே தமது முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளனர். வாகரை போன்ற கடலோரப் பிரதேசங்களில் கடற்றொழில் வளர்ச்சியடைந்து காணப்பட்டாலும் வடபகுதி மீன்பிடிக் கிராமங்களில் மக்கள் தமது ஜீவனோபாயத்துக்காக முழுமையாக கடற்றொழிலில் ஈடுபடுவதுபோல அங்கு ஈடுபடுவதில்லை. இதற்குக் காரணம் மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள போதிய விவசாய நிலங்கள்.

குறிப்பாக மட்டக்களப்பின் தெற்கே கல்முனை வரையான கிழக்குக் கடலோரப் பிரதேசத்தில் ஆங்காங்கே சில தோணி வலைகளைத்தான் காணமுடியுமே தவிர பெரிய அளவிலான மீன்பிடி நடைபெறுவதில்லை. மேற்குப் பிரதேசத்திலுள்ள மட்டக்களப்பு வாவியில் சிறு தோணிகளை வைத்து குடும்பத் தேவைக்காக மீன்பிடியில் சிலர் ஈடுபடுகின்றனர்.

மட்டக்களப்பின் தெற்கில் கடலோரமாக நீண்டு பரந்திருந்த இந்த வெற்றிடத்தின்மீது சிங்கள அரசுகள் கிட்டத்தட்ட நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் குறிவைத்தன.

கல்லோயாப் பிரதேசத்தில் அதாவது மட்டக்களப்பு வாவிக்கு அப்பால் மேற்கு, தென் மேற்குப் பிரதேசங்களில் தமிழர்கள் கால்நடை வளர்ப்புக்கும் சேனைப் பயிற்செய்கைக்கும் பாவித்த நிலங்களில் சிங்களவர்களைக் கொண்டுவந்து குடியேற்றியதுபோல கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்களிலும் காலி, மாத்தறை அம்பாந்தோட்டைப் பிரதேசங்களிலிருந்து மீனவர்களைக் கொண்டுவந்து குடியேற்றி மீன்பிடியை விருத்திசெய்யும் போர்வையில் தமிழ்ப் பிரதேசங்களை அபகரிக்கும் திட்டம் தீட்டப்பட்டது. அதற்காகக் கடற்கரைப் பிரதேசங்களில் வெளியூர்ச் சிங்களவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு உடனடியாக அவை அவர்களின் பெயரில் பதிவும் செய்யப்பட்டன.

அந்தக் காலத்தில் தமிழர்களுக்கு கடல் மீன்பிடியைப் பற்றி அதிகம் பரிச்சயமில்லாமல் இருந்ததால் உள்ளூர்த் தமிழர்கள் இது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

சிங்களவர்கள் வந்து மீன்பிடிப்பதால் மீன் இலகுவாகவும் மலிவாகவும் கிடைக்கிறது என்று எண்ணிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டார்கள். போதாததற்கு அவர்கள்போடும் கரைவலையைப் போய் கைகொடுத்து இழுத்து விடுவதால் உபகாரமாகக் கிடைக்கும் சில மீன்களைப் பெற்றுக்கொண்டு சந்தோசப்பட்டார்கள்.

இந்த மீனவர்கள் மாரிகாலத்தில் அங்கு இருப்பதில்லை. கடற்றொழிலுக்கு மாரிகாலம் உகந்ததில்லையாதலால் தங்கள் ஊர்களுக்குச் சென்று விடுவார்கள். ஆனாலும் தங்கள் இருப்பை நிரந்தரமாக்கிக்கொள்ள தாங்கள் கட்டிய வாடிகளைச்சுற்றி தென்னை மரங்களை நட்டும் கிணறுகள் மற்றும் கருவாடுபோடும் சீமெந்துத் தளங்களைக் கட்டியும் வைத்திருந்தார்கள். மாரிகாலத்தில் ஊர்திரும்பும்போது தங்கள் வாடிகளுக்குக் காவலாக உள்ளூர் தமிழர்களை வேறு நியமித்து விட்டுச் சென்றார்கள். ஊர் மக்களோ உருவாகிக் கொண்டிருக்கும் நிலைமையின் ஆபத்தை அறியாமல் தங்களுக்கு மலிவாக மீன்கிடைக்கிறது என்பதிலேயே குறியாக இருந்தனர்.

## அலசுவரம்

அலசுபவர்: **மட்டைக்கிளப்பான்**

1977 இலும் அதன் பின்னர் 1983 இலும் ஏற்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்கள் பாதிக்கப்பட்டதால் சிங்கள மீனவர்களும் மீண்டும் வந்து இந்தப் பிரதேசங்களில் தொழில் புரியத் தாங்களாகவே தயங்கினார்கள். அதனால் இந்தக் கடற்கரைப் பிரதேசம் அவர்களின் முற்றுகையிலிருந்து ஒருவாறாகத் தப்பிப் பிழைத்தது. ஆனாலும் கடற்தொழில் விருத்தியடையவில்லை. சிறீலங்காவின் கடற்படையின் நடமாட்டம் இந்தக் கடலோரப் பிரதேசத்தில் அதிகரித்துவிட்டதால் தமிழர்கள் கடற்றொழிலில் ஈடுபடமுடியவில்லை. தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில மீன் வாடிகளே காணப்படுகின்றன.

முஸ்லீம்கள் வாழும் கிராமங்களின் கடற்கரைகளில் மீன்பிடித்தொழில் நல்ல வளர்ச்சி பெற்றுள்ளது. கல்முனையின் தெற்கில் அக்கரைப்பற்று வரையுமுள்ள முஸ்லீம் கிராமங்கள் விவசாயம் கடற்றொழில் இரண்டிலும் வளர்ச்சி பெற்ற பிரதேசங்களாகும். குறிப்பாக ஓலுவில் ஒரு மீன்பிடித் துறைமுகமாகவே வளர்ச்சிபெற்று வருகின்றது.

கல்முனைக்குத் தெற்கேயுள்ளது காரைதீவு. கிட்டத்தட்ட அக்கரைப்பற்று வரையுள்ள கிராமங்களுள் அந்த ஒரு கிராமமே தற்போது தமிழர்கள் செறிந்து வாழும் கிராமமாகும். இடையில் நிந்தவூருக்கு அப்பால் அட்டப்பள்ளம் என்றொரு சிறு தமிழ்க்கிராமமும் உள்ளது. அதைவிட திராய்க்கேணி, மீனோடைக்கட்டு போன்ற தமிழ்க் கிராமங்களிலிருந்த தமிழர்கள் தங்கள் வீடுவாசல் நெற்காணிகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு காரைதீவு கல்முனை போன்ற பிரதேசங்களுக்கு வந்துவிட்டனர். மிகத் திட்டமிடப்பட்ட முறையில் அம்பாறை மாவட்டத்தில் இருந்த கடற்கரையோரத் தமிழ்க் கிராமங்கள் அபகரிக்கப்பட்டன. இன்று அக்கிராமங்களில் தமிழர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களாக இடிந்து பாழடைந்துகிடக்கும் சில இந்துக்கோயில்களே காணப்படுகின்றன.

நிந்தவூருக்கு அடுத்ததாக அக்கரைப்பற்று நோக்கிய பாதையில் மாட்டுப்பளை, சங்கப்பளை என இரு பிரதான வயல்வெளிகள் உண்டு. கல்லோயாக் குளத்தின் வலதுகை வாய்க்கால் வந்து நீரைப் பாய்ச்சுவதால் இப்பிரதேசம் நெற்செய்கைக்குப் பெயர் போனது. கடலை அண்டிய தாழ்நிலப் பிரதேசமாதலால் மேட்டுப் பிரதேசங்களிலிருந்து வளம்மிக்க மேல்மண் அதாவது வண்டல்மண் இப்பிரதேசத்தில் மழை காலத்தில் வந்து பரவுகின்றது. இலங்கையிலுள்ள உற்பத்தித் திறன் கொண்ட பிரதேசங்களில் இது முதன்மையானது.

ஒரு காலத்தில் இப்பிரதேசக் காணிகள் தமிழரின் பூர்வீகச் சொத்தாக இருந்தன. ஆனால் இக்காணிகளில் நெற்செய்கையைச் செய்து பொருளீட்டமுடியாமல் சோம்பேறித்தனமாய்த் தமிழர்கள் அவற்றைக் குத்தகைக்குக் கொடுத்ததனால் படிப்படியாக அவை கைமாறிப் போய்விட்டன.

இப்படியாக அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்குத் தெற்கேயுள்ள கடற்கரைப் பிரதேசத்தின் வளம் மிக்க கிராமங்களையும் வயல்வெளிகளையும் தமிழர்கள் இழந்ததால் இன்று அப்பிரதேசம் தனி மாநிலமாகப் பிரிக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்குமளவுக்கு இன விகிதாசார ரீதியில் மாற்றமடைந்துள்ளது. இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இழுத்தடிப்பதற்கு சிங்கள அரசுகளுக்குத் துணைபோகும் ஒரு முழுமுதற் காரணியாக இந்த அம்பாரை மாவட்டத்தின் கிழக்குக் கடற்கரைச்சாலைப் பிரதேசமே இன்று விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது.

*- தொடருவம்.*


# அகதி நிலை ஆரம்ப முதல் இறுதி விண்ணப்பம்

- அகதி நிலை தடுப்புக்காவல்/பிணை விடுவிப்பு/மேன்முறையீடு
- ஐக்கிய இராச்சிய/உள்வரவு அனுமதி/விசா விண்ணப்பம்
- தொழில் முறை மற்றும் மாணவர் விசா விண்ணப்பம்
- ஐக்கிய இராச்சிய பிரஜாவுரிமை/தேசியம்
- வதிவிட உரிமை/நீண்டகாலம் தங்கியுள்ளோர் விண்ணப்பம்
- வேலை செய்யும் விடுமுறை விண்ணப்பம்;
- உயர்தரத் திறமை குடிவரவுத் திட்டம்
- ஐரோப்பிய ஒன்றியம்/ ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரப் பிரதேச, சுவிஸ் நாட்டு குடும்ப அங்கத்தவர் பதிவு.
- தங்கியுள்ளோர்/உறவினர் விடுமுறை/வதிவிட விண்ணப்பம்
- விசா நீடிப்பு

பல் வேறுபட்ட குடிவரவு தொடர்பான விடயங்களில் பல வெற்றிகரமான சேவையினை ஆற்றிவரும் எமது நிறுவனம், தனது சேவையை புதிய இடத்தில் ஆரம்பிக்கிறது. உங்களது பிரச்சினைகளை இலகுவாக இனம்கண்டு, சரியானதும், விரைவானதுமான தீர்வுகான நாடுங்கள்.

# **Asylum applications** from the **initial** to the **final** stage.

- Immigration appeals / Detention / Release on Bail
- Fast track asylum applications and appeals
- Entry clearance application / Visa application
- Business work permit / Student visa application
- Nationality / Citizenship
- Leave to remain / long term residence application
- Working holiday visa application.
- Highly Skilled Migration Programme (HSMP)
- EU/ EEA/ Swiss Registration for registration certificate
- Dependant relatives and spouses
- Visa extension
- Marriage – Certificate of approval applications
- British immigration and work permit.

Contact: **Mrs Suresh** on **07952 790 650**

251A Haydons Road T: **020 8540 1505**
Wimbledon, SW19 8TY. F: **020 8540 0999**
(பிள்ளையார் கோவிலுக்கு முன்னால்)